திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, மீன் வளர்ப்பு பயிற்சிக் கழகத்தின் மூலமாக குட்டைப் பகுதிகளுக்கு மட்டும் உதவி அளிப்பது பற்றிச் சொன்னார்கள். ஆனால் ஏரிப்பகுதி களிலே உதவி அளிக்க முடியாது என்று சொல்கின்ற காரணத்தால் அதை மாற்றி ஏரிப் பகுதிகளுக்கும் உதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆராயப் படவேண்டிய ஒன்று. அதைப் பற்றி ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சேர்ந்த காசிமேட்டுப் பகுதியிலே உள்ள கடற் கரைப் பகுதியிலே இறால் மற்றும் உள்ள மீன்களை வளர்ப்பதற் காக இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான வேலைகளைச் செய்யாமல் நீண்டகாலமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக அங்கே மீன் வளர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு எந்த அளவுக்கு திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது உள்நாட்டு நீர் நிலைகளின் தன்மையை பொறுத்ததுதான். ஆகவே உள்நாட்டு குளங்கள், ஏரிகள், குட்டைகள் போன்றவற்றிற்காக முகமைகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. சென்னையைப் பொறுத்தவரை, 10 கோடி ரூபாய்ச் செலவில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிவடைந் துள்ளன. மத்திய அரசின் உதவியோடு மாநில அரசும் சேர்ந்து இதிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறது. விரைவிலே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்படும். இன்னும் சில பல மாதங்களில் முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

சென்னையில் 1982 ஆம் ஆண்டு மே மாதத்தில் மீனவ மகளிர்களுக்கு அளிக்கப்பட்ட தனிப்பயிற்சி

*வினா எண் 301—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மீனளத்துறை இயக்குனர் அலுவலகத் தில் 1982 மே மாதத்தில் மீனவ மகளிர்களுக்கு தனிப்பயிற்சி அளிக்கப்பட்டதா?

1983 மார்ச் 7]

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) அதன் நோக்கமென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் செயல் பட்டுவரும் வங்காள விரிகுடா நிறுவனம் மற்றும் மீன் துறையும் சேர்ந்து 1982 மே திங்களில் மீனவ மகளிர்க்கென ஓர் பயிற்சி வகுப்பு துவங்கியது.

(ஆ) இப்பயிற்சியானது சமூக அமைப்பு உள்ளுரை பயிற்சி திட்டமாகும். மொத்த பயிற்சி காலம் 5 பிரிவுகளாக பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு பிரிவும் இரண்டு வாரகாலம் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி காலத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் பற்றி கல்வியளிக்கப்படுகின்றது :—

1. மீனவர் சமுதாய அமைப்பு.

2. மீன்களை கையாளுவது மற்றும் மீன்களை பதப் படுத்துதல்.

3. சுகாதாரம் மற்றும் குடும்ப நல திட்டம்.

4. அரசு நடைமுறைப்படுத்தி வரும் மீனவர் நல திட்டங்கள்.

5. தலைமை பொறுப்பேற்கும் பயிற்சி.

(இ) மீனவ மகளிரிடையே விழிப்புணர்ச்சி உண்டாக்கி அரசாங்கத்திற்கும் மீனவ சமுதாயத்திற்கும் இடையே பால மாக அமைந்து அரசுத் திட்டங்களை நன்கு புரிந்து பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளவும், அவ்வப்போது அடிப்படை தேவைகளை அரசிடமிருந்து கேட்டுப் பெற அணுக வேண்டிய முறை பற்றியும் கற்பிப்பதுதான் இப்பயிற்சியின் நோக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, இதுபோன்ற பயிற்சி சென்னையைத் தவிர தமிழ்நாட்டில் வேறு இடங்களில் நடத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? அந்தப் பயிற்சிக் காலத்தில் ஏதாவது உதவித் தொகை அளிக்கப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னையிலே பரிட்சார்த்த மாக நடத்தப்பட்டு வருகிறது. ஓரளவுக்கு பலன் ஏற்பட்டது என்று ஆராய்ந்ததற்குப் பிறகு பிற இடங்களில் தொடங்குவது பற்றி ஆராய்வோம். ஆகவே இதிலே அவர்களுக்கு இலவசமாக 3 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க

வேண்டும். கல்யாணம் ஆனவர்களாக இருக்க வேண்டும். 40 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஏழை எளியவர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கவேண்டும். தங்கிப் படிப்பதற்கு விருப்பம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். பெண்கள் கூட்டத்திலே கலந்து கொண்டு புதியவற்றை கற்றுக் கொள்ள ஆர்வம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஏதேனும் உதவித் தொகை தரப்படுகிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற இடங்களிலே, குறிப்பாக ராமேஸ்வரம் போன்ற பகுதியிலே உள்ள கடற்கரைப் பகுதியில் இத்தகைய பயிற்சி நடத்தப்படுமா? இன்னும் பெண்கள் ஆர்வத்தோடு கலந்து கொள்ளும் வகையில் இந்தப் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பிற இடங்களில் பெண்களுக்கும் இப்படிப்பட்ட பயிற்சி அளிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் இப்போது பிற இடங்களில் துவக்குவதற்கான செயற்குறிப்பு இல்லை. ஆகவே அவர்களுக்கு உதவித் தொகை இப்போது தரப்படுகிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

(முற்பகல் 9—10)

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன்வளத் துறையின் மூலமாகப் பயிற்சி அளிப்பதற்குத் திருமணம் ஆனவர்கள் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படி திருமணமானவர்கள் என்றால், திருமணமாகி கணவனை இழந்த விதவைகளும் இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். திருமணமாகி இருக்க வேண்டும் என்பது தான் கண்டிஷனே தவிர கணவன் உயிரோடு இருக்க வேண்டுமென்பது நிபந்தனையாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 302, 303 மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.